# சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை

# சுற்றுலா

## கொள்கை விளக்கக் குறிப்பு 2011–2012

### முன்னுரை

சுற்றுலா என்பது ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு உந்துகோலாகவும், பொருளாதார வளமைக்கான ஊக்க சக்தியாகவும் அறியப்படுகிறது.

சுற்றுலாப் பயணிகளின் மனதிற்கு புத்துணர்ச்சி, மகிழ்ச்சி, இளைப்பாறுதல் மற்றும் புதிய அனுபவங்களை சுற்றுலா அளிக்கிறது. வான் வழி, இரயில், தரை வழிப் போக்குவரத்து மற்றும் கடல் வழிப் போக்குவரத்து, தங்கும் விடுதிகள், தொலைத் தொடர்பு மற்றும் பல்வேறு துறைகளிலும் பன்முக பொருளாதார வளர்ச்சிக்கான தாக்கத்தினை சுற்றுலா ஏற்படுத்துகிறது.



சுற்றுலா நேரடி வேலை வாய்ப்பினை உருவாக்குவதோடு, அதன் மறைமுக தாக்கமாக உள்ளூர் மக்களின் மேம்பாட்டையும் உறுதிப் படுத்துகிறது.

சேவைத் துறை என்ற நிலையிலிருந்து, இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள் தொழில், தகவல் தொழில் நுட்பம் மற்றும் பொறியியல் சாதனங்கள் உற்பத்தி போன்ற துறைகளைப் போல சுற்றுலாத் துறையும் ஒரு முன்னணி ஏற்றுமதி தொழிலாக தற்போது உருவாகி உள்ளது.

எனவே, சுற்றுலாத்துறைக்கு அதிக ஊக்கமளிக்க மைய மற்றும் மாநில அரசுகளால் அதிக முன்னுரிமை வழங்கப்படுகிறது. உலகத் தரம் வாய்ந்த சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதலுக்கும், சுற்றுலாத் தலங்களை சந்தைப்படுத்துதலுக்கும் ஒரு புதிய ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

சுற்றுலாப் பயணிகளுக்கு போக்குவரத்து, தங்குமிடம், உணவு போன்றவை எளிதாகவும், நல்லமுறையிலும் கிடைக்க ஏற்பாடுகள் செய்வதன் மூலம், அவர்கள் பயணம் செய்த இடத்திற்கு மீண்டும் வருகை தரவும், அவர்களின் நல்ல அனுபவத்தை பிறருக்கு பகிர்வது சிறந்த விளம்பரமாக அமையும்.

முன்பு சுற்றுலா என்பது ஒரு சமயம் சார்ந்த அல்லது ஓய்விற்கான நடவடிக்கையாக கருதப்பட்டது. தற்போது, சுற்றுலாத் தலங்களை

சென்றடைவதற்கு மேம்படுத்திய தரமான இணைப்புச் சாலைகள், கணினி வழி முன்பதிவு வசதிகள் போன்றவை பயணத்தை எளிதாக்கியுள்ளன. ஒரே விதமான பணிகள், மன அழுத்த வாழ்க்கைக்கு மாற்றம் தேடும்போதும், புதிய இடங்களுக்கு சென்று அதனை கண்டு மகிழ எண்ணும்போதும், பயணமும் சுற்றுலாவும் ஒருங்கிணைந்த காரணிகளாகின்றன. எளிமையான வர்த்தகக் கொள்கை மற்றும் தாராளமயமாக்கப்பட்ட வானூர்தி கொள்கை ஆகியன சுற்றுலா மேம்பாட்டிற்கு முக்கிய பங்காற்றியுள்ளன. சமீப காலங்களில் ஏற்பட்ட சுற்றுலாவின் வேகமான வளர்ச்சியின் காரணமாக, உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனிதவள தேவைகள் அதிகரித்துள்ளன. இதற்கு ஈடான வகையில் எதிர்காலத்தில் வளமான திட்டங்களை வகுத்தல் அவசியமாகிறது.

**இந்திய சுற்றுலா**

இந்தியா சுற்றுலா பயணிகளை கவர்ந்து ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளது. பனி சூழ்ந்த மலைகள், உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹால், ஈர்ப்புத் தன்மை கொண்ட தமிழக கோயில்கள், நீண்ட கடற்கரை, அரண்மனைகள், புனித தலங்கள், வரலாற்று நினைவு சின்னங்கள், வனவிலங்கு சரணாலாயங்கள், இயற்கை வளங்கள், கிராமிய வாழ்க்கை முறை, பண்பாடு பரிமாற்றம், கலை, கைவினைப் பொருட்கள், கட்டிடக் கலை மற்றும் உணவு வகைகள் போன்றவைகளை இந்தியா தன்னகத்தே



கொண்டுள்ளது. இந்திய அரசு தற்போது சுற்றுலா வளர்ச்சிக்கு முன்னுரிமை வழங்கி, முனைப்பான மேம்பாட்டு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. சுற்றுலா இடங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு தேவையான நிதி உதவிகளை இந்திய அரசு மாநிலங்களுக்கு வழங்கி வருகிறது. சுற்றுலா வளங்களை முழுமையாக பயன்படுத்தினால், பல மடங்கு வளர்ச்சியும், அதன் விளைவாக சமூக மற்றும் பொருளாதார மேம்பாடும் அடைய இயலும்.

**தமிழ்நாடு சுற்றுலா – வளங்களும், வாய்ப்புகளும்**

**தொலைநோக்கு பார்வை**

(அ) பன்னாட்டு அளவில் கவரக்கூடிய ஒரு சுற்றுலா இடமாக தமிழ்நாட்டினை மேம்படுத்துதல்

(ஆ) வளமையான பண்பாடு, பாரம்பரிய நினைவுச் சின்னங்களிலுள்ள கட்டிடக் கலை சிறப்புகளை பாதுகாத்தல்

**குறிக்கோள்**

(அ) மாநிலத்தில் ஏற்கனவே உள்ள சுற்றுலா உள்கட்டமைப்பினை உறுதிப்படுத்துதல்

(ஆ) சுற்றுலா மேம்பாட்டிற்காக, கண்டறியப்படாத வளமைகளை வெளிக்கொணர்தல்

(இ) சுற்றுலா உள்கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளை கண்டறிந்து, வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குதல்

(ஈ) மாநிலத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உலகத் தரமுள்ள சேவைகளை வழங்குதல்

(உ) 40 இலட்சம் வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை மற்றும் 60 இலட்சம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை என்ற இலக்கினை அடுத்த ஐந்தாண்டுகளில் எட்டுதல்.

**சுற்றுலாவின் முக்கியத்துவம்**

(அ) நாட்டின் அந்நியச் செலாவணியினை பெருக்குதல்.

(ஆ) வேலை வாய்ப்பினை உருவாக்குதல், குறிப்பாக சேவைத் துறையில் வேலை வாய்ப்பினை உருவாக்குதல் மற்றும் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

இந்திய அரசின் மதிப்பீட்டின்படி, ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்தால் உற்பத்தித் துறையில் 126 வேலை வாய்ப்புகள் மட்டும் உருவாகும். ஆனால், சுற்றுலாத் துறையில் முதலீடு செய்யும்போது 475 வேலை வாய்ப்புகள் உருவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.



**சாதனை இலக்குகள்**

(1) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவருவதில் இந்தியாவில் தமிழ்நாடு முதன்மையான இடத்தினை அடையச் செய்தல்.

(2) சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரித்தல்.

(3) சுற்றுலாப் பயணிகள் தங்கும் காலத்தினை நீட்டித்தல்.

(4) வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலா பயணிகள் செலவு செய்வதை அதிகரித்தல்.

**உத்திகள்**

(அ) அதிக வளம் நிறைந்த சுற்றுலா சுற்றுக்களில் ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு மேம்பாடு செய்தல்.

(ஆ) சுற்றுச் சூழல் மேம்படுத்துதல், தரமான இணைப்புச் சாலைகள் அமைத்தல், பொது வசதிகள் மற்றும் சிறப்பான சுற்றுலாச் சேவைகள் அளித்தல்.

(இ) பல்வேறு சுற்றுலா சார்ந்த அமைப்புகளை ஒருங்கிணைக்க, சட்ட அமைப்புகளை மேம்படுத்துதல்.

(ஈ) சுற்றுச்சூழல் மற்றும் பாரம்பரியத்தை நிலை நிறுத்துதல், சமூக நலம் உள்ளடக்கிய சுற்றுலாவை மேம்படுத்துதல்.

(உ) தனியார் துறையினர் மற்றும் உள்ளூர் மக்களை சுற்றுலாத் திட்டங்களில் ஊக்கப்படுத்துதல்.

(ஊ) வேலை வாய்ப்பினை உருவாக்குதல், வறுமையினை நீக்குதல், சுற்றுச் சூழல் மேம்பாடு, மகளிர் மற்றும் நலிந்தோருக்கான மேம்பாடு ஆகியவற்றின் மூலமாக சுற்றுலாவை நிலைப்படுத்துதல் மற்றும் திறன் வளர்ப்பு மூலமாக மனித வள மேம்பாட்டினை உறுதி செய்தல்.

**சுற்றுலா மேம்பாட்டில் தமிழ்நாட்டின் சிறப்பு அம்சங்கள்**

**1) சுற்றுலா தலங்கள்**

**(1) அருமையான மலை வாசஸ்தலங்கள்**

ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி, ஜவ்வாது மலை, கொல்லி மலை, சிறு மலை, வால்பாறை, டாப் ஸ்லிப், கல்வராயன் மலை மற்றும் பச்சை மலை.



**(2) வெள்ளி போன்ற அருவிகள்**

குற்றாலம், ஒகேனக்கல், திற்பரப்பு, பாபநாசம், ஆகாச கங்கை (கொல்லி மலை), திருமூர்த்தி அருவி.

**(3) தேசியப் பூங்காக்கள்**

கிண்டி தேசியப் பூங்கா, ஆனைமலை—இந்திராகாந்தி தேசியப் பூங்கா மற்றும் மன்னார் வளைகுடா கடல்சார் தேசியப் பூங்கா.

**(4) வனவிலங்கு மற்றும் பறவைகள் சரணாலயங்கள்**

**அ) வனவிலங்கு சரணாலயங்கள்**

முதுமலை, களக்காடு, முண்டந்துறை, கோடியக்கரை மற்றும் பேரிஜம்.

**ஆ) பறவைகள் சரணாலயங்கள்**

வேடந்தாங்கல், கரிக்கிலி, பழவேற்காடு, கரைவெட்டி, உதயமார்த்தாண்டபுரம், வடுவூர், சித்திரங்குடி, கூந்தன்குளம், வெள்ளோடு, மேலசெல்வனூர், வேட்டங்குடி மற்றும் பிச்சாவரம் மாங்குரோவ் கழிமுகத்துவாரம்.

**(5) தாவரவியல் பூங்காக்கள்**

ஊட்டி, கொடைக்கானல், கோயம்புத்தூர்.

**(6) யுனஸ்கோ மூலம் அறிவிக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள்**

தஞ்சை பெரிய கோவில், தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோவில் மற்றும் கங்கைகொண்ட சோழபுரம் சிவன் கோவில் ஆகிய சோழர் காலத்திய கோவில்கள், மாமல்லபுரத்திலுள்ள நினைவுச் சின்னங்கள், நீலகிரி பாரம்பரிய மலை இரயில்.

**(7) கடற்கரைகள்**

மெரினா, எலியட்ஸ், கன்னியாகுமரி, பழவேற்காடு, முதலியார் குப்பம்.

**(8) புகழ்பெற்ற கோவில்கள்**

நவக்கிரக கோயில்கள், நவதிருப்பதி கோயில்கள், முருகக் கடவுளின் அறுபடை வீடுகள், இராமேசுவரம், சிதம்பரம், மதுரை, தஞ்சாவூர், ஸ்ரீரங்கம், திருவண்ணாமலை, கன்னியாகுமரி, காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் உள்ள புகழ் பெற்ற கோயில்கள்.



**கிறித்தவ தேவாலயங்கள்**

சாந்தோம், வேளாங்கன்னி, மணப்பாடு, பனிமய மாதா, பூண்டி மாதா ஆலயம்.

**இஸ்லாமிய மசூதிகள்**

சென்னையிலுள்ள ஆயிரம் விளக்கு மசூதி, நாகூர் தர்கா, ஏர்வாடி, தேங்காய்பட்டினம், கீழக்கரை, காயல்பட்டினம்.

**(9) அருங்காட்சியகங்கள்**

சென்னை அருங்காட்சியகம் மற்றும் மாவட்டங்களில் உள்ள 20 இதர அருங்காட்சியகங்கள்.

**(10) அரண்மனைகள்**

திருமலை நாயக்கர் அரண்மனை, தஞ்சாவூர் அரண்மனை, பத்மநாபபுரம் அரண்மனை, செட்டிநாடு அரண்மனை.

**(11) கோட்டைகள்**

சென்னையிலுள்ள புனித ஜார்ஜ் கோட்டை, தரங்கம்பாடியிலுள்ள டச்சுக் கோட்டை, வேலூர், திண்டுக்கல், நாமக்கல், செஞ்சி, திருமயம் மற்றும் கட்டபொம்மன் கோட்டை.

**2) போக்குவரத்து உள்கட்டமைப்பு**

(1) அருமையான இணைப்புச் சாலைகள் (சென்னை முதல் கன்னியாகுமரி வரையிலான நான்கு வழிச் சாலை மற்றும் கிழக்கு கடற்கரைச் சாலை)

(2) சென்னையிலுள்ள ஒரு பன்னாட்டு விமான நிலையம் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், வாகைக்குளம் ஆகிய இடங்களிலுள்ள விமான நிலையங்கள் மற்றும் அரசு மற்றும் தனியார் விமான சேவைகள்.

(3) பிற மாநிலங்களில் உள்ள முக்கிய நகரங்களுடன் தமிழ்நாட்டில் உள்ள முக்கிய நகரங்களை இணைக்கும் இரயில் வழித் தடங்கள்.

(4) மூன்று முக்கிய துறைமுகங்கள்.

**3) கல்வி மற்றும் மருத்துவ நிறுவனங்கள்**

முதன்மையான கல்வி மற்றும் மருத்துவ நிறுவனங்கள், முக்கிய மருத்துவ நிறுவனங்கள் ஆகியன தமிழ்நாட்டில் உள்ளன.



**4) திறன் வாய்ந்த மனித ஆற்றல்**

**5) நன்கு அமையப் பெற்ற தனியார் மற்றும் ஒருங்கிணைந்த விருந்தோம்பல் / சேவைத் துறைகள்**

தங்கும் விடுதிகள், பொழுதுபோக்கு பூங்காக்கள், வங்கிகள், காப்பீடு நிறுவனங்கள், அழைப்பின் பேரில் வரும் வாடகை சீருந்துகள் மற்றும் பல.

**தடைகள் (சுற்றுலா மேம்பாட்டிற்கு தடையாக இருப்பவை)**

1. குறைந்த அளவிலான அணுகுசாலைகள் மற்றும் கடைக்கோடி வரையிலான இணைப்பு சாலைகள்.
2. சுற்றுலாத் தலங்களில் தரம் குறைந்த உள்கட்டமைப்பு வசதிகள்.
3. நிர்வாகத் திறன் குறைந்த சுற்றுலா அமைப்புகள்.
4. தனியார் துறை மற்றும் உள்ளூர் அமைப்புகளின் குறைவான பங்கேற்பு.

**வாய்ப்புகள்**

சுற்றுலாவில் குறிப்பிடத்தக்க வகையில் பயணிகளை ஈர்த்து வரும் வளமிக்க பண்பாடுகள் மற்றும் புனிதத் தல வழிபாட்டு இடங்கள் போன்றவைகளை, மேலும் விரிவுபடுத்த, நல்ல நிர்வாகத் திறனுடன் மேம்படுத்த வாய்ப்புகள் உள்ளன.

குறிப்பாக காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, இராமேசுவரம், மதுரை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களுக்கு புனிதப் பயண சுற்றுலா, யுனஸ்கோவால் அறிவிக்கப்பட்ட மாமல்லபுரம் குடைவரைக் கோவில்கள் போன்ற பாரம்பரியச் சின்னங்களைக் காண வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள், தமிழ்நாட்டின் மொத்த சுற்றுலாச் சந்தையில் 60 விழுக்காடாக கணக்கிடப்பட்டுள்ளது. இருப்பினும் மாநிலத்தின் வரலாற்று சிறப்புமிக்க கடற்கரைப் பகுதிகள், மேற்குத் தொடர்ச்சி மலைக் காடுகள், பல்லுயிர் பாதுகாப்பு (பயோ—டைவர்சிடி) ஆதாரங்கள் மற்றும் வளங்கள் போன்றவைகளின் மூலமாக மேலும் அதிகமான சுற்றுலாப் பயணிகளின் வருகையை ஈர்க்க இயலும்.

**புதிய சுற்றுலா வாய்ப்புகள்**

(1) சுற்றுச்சூழல் சுற்றுலா
(2) ஊரகச் சுற்றுலா
(3) சாகசச் சுற்றுலா
(4) மருத்துவச் சுற்றுலா

**(1) சுற்றுச்சூழல் சுற்றுலா**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் தனியாக ஒரு ‘சுற்றுச் சூழல் சுற்றுலா’ பிரிவு அமைக்கப்பட்டு, மலை வாசஸ்தலங்கள், நீர்வீழ்ச்சிகள், வனங்கள், பறவைகள் சரணாலயங்கள், வனவிலங்கு சரணாலயங்கள், தேசிய பூங்காக்கள் போன்ற இடங்களில் சுற்றுச் சூழல் சுற்றுலாவை மேம்படுத்தி நிலை நிறுத்தும் வகையில்,



சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ஒருங்கிணைந்த வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன. சுற்றுச் சூழலுக்கும், வன உயிரினங்களுக்கும் பாதிப்பில்லாத வகையில் பல்வேறு சுற்றுலாக்கள் உருவாக்கப்பட்டு, இம்மாநிலத்தில் சுற்றுச் சூழல் சுற்றுலா மேம்படுத்தப்படும்.

**(2) ஊரகச் சுற்றுலா**

இந்திய அரசு மற்றும் ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தின் உதவியுடன், **“ஊரகச் சுற்றுலா”** மேம்படுத்தப்பட்டு வருகிறது. இந்திய அரசு நிதியின் மூலம் வன்பொருள் பணிகளும் (உள்கட்டமைப்பு), தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிதியின் மூலம் மென்பொருள் பணிகளும் (திறன் வளர்ப்பு) அரசு சாரா அமைப்புகள் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. 18 ஊரகச் சுற்றுலா திட்டங்களுக்கு ரூ.6.21 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. நகரத்தில் வாழும் குழந்தைகள் ஊரக வாழ்க்கை முறையினை அறிந்திட ஊரகச் சுற்றுலா உதவுகிறது.

**(3) சாகசச் சுற்றுலா**

சாகசச் சுற்றுலா, சுற்றுலாப் பயணிகளிடையே மிகுந்த வரவேற்பை பெற்று வருகிறது. குறைவான உயரமுடைய மலைப் பகுதிகளுக்கு மலையேற்றப் பயண நிகழ்ச்சி, ஏலகிரியில் பாரா கிளைடிங், முட்டுக்காடு மற்றும் முதலியார்குப்பம் படகு இல்லங்களில்

நீர் விளையாட்டுகள் போன்றவை, சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக சாகசச் சுற்றுலாவின் கீழ் மேம்படுத்தப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பினை உறுதி செய்திட, போதுமான அளவில் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

**(4) மருத்துவச் சுற்றுலா**

இந்தியாவிலுள்ள மருத்துவச் சுற்றுலா இடங்களில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. அனைத்து வசதிகளும் உடைய மருத்துவ நிறுவனங்கள், குறைவான காத்திருப்பு நேரம், ஏற்கத்தக்க கட்டணத்தில் சிகிச்சைகள், திறமை வாய்ந்த மருத்துவர்கள் ஆகியன நமது மாநிலத்தில் மருத்துவச் சுற்றுலா மேம்பாட்டிற்கு சாதகமான காரணிகளாக உள்ளன. தமிழ்நாடு சுற்றுலா வளாகத்தில் '**மருத்துவச் சுற்றுலா தகவல் மையம்**' ஒன்று இயங்கி வருகிறது. மருத்துவ நிறுவனங்கள் மற்றும் முக்கிய மருத்துவமனைகளில் சுற்றுலா உதவி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மருத்துவ சுற்றுலாப் பயணிகளுக்கு உதவிடும் வகையில் ஒருங்கிணைக்கப்பட்ட தகவல் களஞ்சியமும் அமைக்கப்பட்டுள்ளது. சென்னை மற்றும் மதுரையில் உள்ள மருத்துவமனைகளில் முதன்மைச் செயல் அலுவலர்களுக்கும், வரவேற்பு மேலாளர்களுக்கும் இது குறித்த பயிற்சி திட்டங்கள் நடத்தப்படுகின்றன. சுற்றுலாத்



துறைக்கு உதவிட, மருத்துவக் கல்வி இயக்குனர் மற்றும் முன்னணி மருத்துவ அமைப்புகளின் நிபுணர்கள் ஆகியோரைக் கொண்ட முனைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது தனி வகை மருத்துவ நுழைவு இசைவு (விசா) வழங்கிட இந்திய அரசு அனுமதித்து வருகிறது. இவ்வகை மருத்துவ நுழைவு இசைவு அதிகபட்சமாக ஓராண்டிற்கு வழங்கப்படுகிறது. இதனை மருத்துவ சுற்றுலாப் பயணிகளும், அவர்களுடன் வருகை தரும் உதவியாளர்களும் பயன்படுத்தலாம். உலகத்தரம் வாய்ந்த மருத்துவ வசதிகளும் மருத்துவ மனைகளும் தமிழ்நாட்டில் உள்ள விவரங்கள் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் நடைபெறும் சுற்றுலா சந்தைகளிலும், கருத்தரங்குகளிலும், மாநாடுகளிலும் எடுத்துரைக்கப்படுகின்றன. தற்போது தமிழ்நாடு ஆசியாவின் மருத்துவ சுற்றுலாவிற்கான மையமாக உருவெடுத்து உள்ளது.

மருத்துவச் சுற்றுலாப் பயணிகள், முக்கியமாக இங்கிலாந்து, ஐக்கிய அரேபிய நாடுகள், சிங்கப்பூர், மலேசியா, மொரீசியஸ், ஆப்பிரிக்க நாடுகள், மாலத்தீவு மற்றும் மேற்கு வங்காளம், வடகிழக்கு மாநிலங்களிலிருந்து தமிழகத்தின் மருத்துவ வசதிகளை பயன்படுத்துகின்றனர்.

தற்போது, மருத்துவச் சுற்றுலா மேலும் விரிவடைந்துள்ளது. மருத்துவச் சுற்றுலா அதிகளவில் உடல்நலத்தை பேணுவதாக கருதப்படுகிறது. ஆனால், நலம் பேணும் சுற்றுலா, சுற்றுலாப் பயணிகளின் உடல்நலத்தையும், மனதையும் சரியான வகையில் நலமுடன் வைத்திட உதவுகிறது. தமிழ்நாட்டில் நலம்பேணும் சுற்றுலாவை விரிவுபடுத்த பெரும் வாய்ப்புகள் உள்ளன. இயற்கை மருத்துவம், யோகா மற்றும் தியானம் ஆகியவற்றை சுற்றுலா சார்ந்த இனங்களாக மேம்படுத்தப்பட்டு வருகிறது.

**பாரம்பரியச் சுற்றுலா**

தமிழ்நாட்டின் வளமான பண்பாடு பாரம்பரியங்கள், சுற்றுலா பயணிகளைக் கவருவதில் ஒரு முக்கியப் பங்காற்றுகிறது. மாநில அரசு தமிழ்நாட்டிலுள்ள 48 சுற்றுலாத் தலங்களை பாரம்பரிய இடங்களாக அறிவித்துள்ளது. சுற்றுலாப் பயணிகள், குறிப்பாக வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் தமிழ்நாட்டின் கலை, பண்பாடு, கட்டிடக்கலை, பாரம்பரிய கைவினைப் பொருட்கள், மற்றும் பல்வகை உணவு வகைகளின் மீது சிறப்பு விருப்பம் கொண்டுள்ளனர். டிசம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை நடைபெறும் இசை மற்றும் நாட்டிய விழாக்கள் அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றன. தமிழ்நாட்டின் பாரம்பரிய



உணவு வகைகள், குறிப்பாக செட்டிநாடு, மதுரை, திருநெல்வேலி மற்றும் கொங்கு நாட்டு உணவு வகைகள் பல்வேறு தனிச் சிறப்பான சுவையினைக் கொண்டிருப்பது சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு சுற்றுலாத் துறை ஒவ்வொரு ஆண்டும் நாட்டிய விழா, உணவு திருவிழா, மற்றும் பண்பாடு திருவிழா போன்ற விழாக்களை சிறப்பாக நடத்தி, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

செட்டிநாடு மாளிகை போன்ற சில பாரம்பரிய கட்டிடங்கள் பயன்படுத்தப்படாமலும் அல்லது குறைவான பயன்பாட்டிலும் உள்ளன. இவற்றின் தனித்துவம் வாய்ந்த கட்டிடக்கலை, விசாலமான தாழ்வாரம், நுணுக்கமான மர வேலைப்பாடுகள், அமைதியான சூழல் மற்றும் சுவையான உணவு வகைகள் போன்றவற்றின் சிறப்புகளை எடுத்தியம்பி வெளிக் கொணர்வதால், அவை சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்துள்ளன. தற்போது சில செட்டிநாடு மாளிகைகள் பாரம்பரிய விடுதிகளாக மாற்றப்பட்டுள்ளன. செட்டிநாடு வீடுகளை பாரம்பரிய விடுதிகளாக மேம்படுத்தி அதிகளவில் சுற்றுலா பயணிகளை கவர்ந்திட, அவற்றின் உரிமையாளர்கள் சுற்றுலாத் துறையால் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

## அதிகப் பிரபலமாகாத சுற்றுலா மையங்களை மேம்படுத்துதல்

தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலாத் தலங்களான உதகமண்டலம், கொடைக்கானல், மதுரை, இராமேசுவரம், மாமல்லபுரம், கன்னியாகுமரி போன்றவை அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை கவர்கின்றன.

கோடை காலங்களில், ஊட்டி மற்றும் கொடைக்கானல் போன்ற இடங்களில் அவற்றின் தாங்கு சக்திக்கும் மேலாக சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். இச்சூழ்நிலை அந்த இடங்களுக்கு எதிர்மறை விளைவை உருவாக்குகின்றன. எனவே, சுற்றுலாவை நிலை நிறுத்தும் முயற்சியாக, தமிழ்நாட்டிலுள்ள அதிகப் பிரபலமாகாத சுற்றுலா வளம் வாய்ந்த, ஆனால் குறைவான சுற்றுலாப் பயணிகள் வருகைதரும் சுற்றுலாத் தலங்களை தேர்ந்தெடுத்து, அவற்றை சுற்றுலாத் துறை மேம்படுத்தி வருகிறது. இது போன்ற இடங்கள் மிதமிஞ்சிய சுற்றுலாப் பயணிகள் வருகையை ஈர்க்கும்.

மாற்று சுற்றுலாத் தலங்களை அளிப்பதற்காக, பின்வரும் 32 அதிகப் பிரபலமாகாத சுற்றுலாத் தலங்கள் கண்டறியப்பட்டு, அவ்விடங்களில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிட முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.



| வ. எண் | இடத்தின் பெயர் | மாவட்டத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | பெரியபாளையம் | திருவள்ளூர் |
| 2 | பழவேற்காடு | |
| 3 | ஏலகிரி | வேலூர் |
| 4 | திருக்கடையூர் | நாகப்பட்டினம் |
| 5 | வேதாரண்யம் | |
| 6 | தரங்கம்பாடி | |
| 7 | திருமணஞ்சேரி | |
| 8 | சிக்கல் | |
| 9 | சித்தன்னவாசல் | புதுக்கோட்டை |
| 10 | புளியஞ்சோலை | திருச்சிராப்பள்ளி |
| 11 | தாரமங்கலம் | சேலம் |
| 12 | கொல்லி மலை | நாமக்கல் |
| 13 | ஒகேனக்கல் | தருமபுரி |
| 14 | பவானி கூடுதுறை | ஈரோடு |
| 15 | வால்பாறை | கோயம்புத்தூர் |
| 16 | மேகமலை | தேனி |
| 17 | சிறுமலை | திண்டுக்கல் |
| 18 | திருப்புடைமருதூர் | திருநெல்வேலி |
| 19 | திற்பரப்பு | கன்னியாகுமரி |
| 20 | கல்வராயன் மலை | விழுப்புரம் |
| 21 | தளி | கிருஷ்ணகிரி |
| 22 | பரளி | திண்டுக்கல் |
| 23 | கொடிவேரி | ஈரோடு |
| 24 | பொள்ளாச்சி | கோயம்புத்தூர் |
| 25 | குரங்கணி | தேனி |
| 26 | வைகை அணை | |
| 27 | ஸ்ரீவில்லிபுத்தூர் | விருதுநகர் |
| 28 | கட்டபொம்மன் கோட்டை | தூத்துக்குடி |
| 29 | திருச்செங்கோடு | நாமக்கல் |
| 30 | பிச்சாவரம் | கடலூர் |
| 31 | பச்சமலை | திருச்சிராப்பள்ளி |
| 32 | கூத்தனூர் | திருவாரூர் |

அதிகப் பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களுக்கு சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திட, மைய அரசு நிதி உதவி மற்றும் மாநில

அரசு நிதி உதவிகள் மூலம் திட்டங்களை உருவாக்கி அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன.

அதிகப் பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களில் சுற்றுலாவை மேம்படுத்த வழங்கப்படும் ஊக்கத் தொகைகளின் விபரம் பின்வருமாறு :—

**தனியார் முதலீட்டிற்கான ஊக்கத் தொகை**

நட்சத்திர தங்கும் விடுதிகள், பொழுதுபோக்கு பூங்காக்கள், குழிப்பந்தாட்ட மைதானங்கள் (Golf), புத்துணர்வு சுற்றுலா மையங்கள், படகு இல்லங்கள் போன்றவற்றில் முதலீடு செய்ய விரும்பும் தனியார் தொழில் முனைவோரை கவர்ந்திட வழங்கப்படும் ஊக்கத் தொகைகளின் விபரம் :—

**(1) நட்சத்திர தங்கும் விடுதிகள் கட்டுவதற்கான ஒருமுறை ஊக்கத் தொகை**

| வ. எண். | தரம் | ஊக்கத் தொகை |
|---|---|---|
| 1 | ஒரு நட்சத்திரம் | மொத்த திட்ட மதிப்பீட்டில் 10 விழுக்காடு (நிலமதிப்பு நீங்கலாக) அல்லது அதிக பட்சமாக ரூ.25.00 இலட்சம் |
| 2 | இரண்டு நட்சத்திரம் | மொத்த திட்ட மதிப்பீட்டில் 10 விழுக்காடு (நில மதிப்பு நீங்கலாக) அல்லது அதிக பட்சம் ரூ.50.00 இலட்சம் |
| 3 | மூன்று நட்சத்திரம் | மொத்த திட்ட மதிப்பீட்டில் 10 விழுக்காடு (நில மதிப்பு நீங்கலாக) அல்லது அதிகபட்சமாக ரூ.100.00 இலட்சம் |



**(2) பிற சுற்றுலாத் திட்டங்களுக்கான ஒரு முறை ஊக்கத் தொகை**

| | |
|---|---|
| பொழுதுபோக்குப் பூங்காக்கள், குழிப்பந்தாட்ட மைதானங்கள் (Golf), கம்பிவட ஊர்தி, படகு குழாம்கள் | மொத்த திட்ட மதிப்பீட்டில் 10 விழுக்காடு (நில மதிப்பு நீங்கலாக) அல்லது அதிகபட்சமாக ரூ.100.00 இலட்சம் |

**(3) மென் கடன்**

மதிப்புக் கூட்டு வரியை செலுத்திட முதல் ஐந்து ஆண்டுகளுக்கு, ஆண்டு ஒன்றுக்கு 0.1 விழுக்காடு என்ற வீதத்தில், குறைந்த வட்டிக்கு கடன் அளிக்கப்படும்.

**(4) பாரம்பரியக் கட்டிடங்களை பாரம்பரிய தங்கும் விடுதிகளாக மாற்றுதல் மற்றும் பாரம்பரிய தங்கும் விடுதிகளுக்கான ஊக்கத் தொகை**

பாரம்பரியக் கட்டிடங்களை, பாரம்பரிய தங்கும் விடுதிகளாக மாற்றுவோருக்கு, கட்டுமானப் பணிகளுக்கான முதலீட்டில் 10 விழுக்காடு ஊக்கத் தொகை அரசால் வழங்கப்படுகிறது.

**(5) பாரம்பரிய தங்கும் விடுதிகளுக்கான ஊக்கத் தொகை**

**(அ) பாரம்பரிய தங்கும் விடுதிகள்:**

1950ஆம் ஆண்டிற்கு முன்னர் கட்டிடம் கட்டப்பட்டிருக்க வேண்டும். இதில் குறைந்தது 5 அறைகள் (10 படுக்கைகள்) இருக்க வேண்டும்.

**(ஆ) உயர் தர பாரம்பரிய தங்கும் விடுதிகள் :**

1935ஆம் ஆண்டிற்கு முன்பு கட்டப்பட்டிருக்க வேண்டும். இதில் குறைந்தபட்சம் 15 அறைகள் (30 படுக்கைகள்) இருக்க வேண்டும்.

**உணவு**

இந்த தங்கும் விடுதியில் பாரம்பரிய உணவை பரிமாறுதல் வேண்டும். ஆனால், பன்னாட்டு சமையலுக்கு ஏற்ப நான்கு அல்லது ஐந்து உணவு வகைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

**மனித வள மேம்பாடு**

பின்வரும் இரண்டு அரசு விருந்தோம்பல் மேலாண்மை நிறுவனங்கள், தங்கும் விடுதி மற்றும் உணவக மேலாண்மை மற்றும் பல்வேறு கைவினை சான்றிதழ் படிப்புகளை வழங்கி வருகிறது.



1. மாநில தங்கும் விடுதி மேலாண்மை மற்றும் உணவு தயாரிப்பு தொழில் நுட்ப நிறுவனம், துவாக்குடி, திருச்சிராப்பள்ளி.

2 தங்கும் விடுதி மேலாண்மை, உணவு தயாரிப்பு தொழில் நுட்பம் மற்றும் ஊட்டச்சத்து நிறுவனம், தரமணி, சென்னை (இந்திய அரசு நிறுவனம்).

**விருந்தோம்பல் பயிற்சித் திட்டம்**
**(ஹுனார் சே ரோஜ்கார் யோஜனா)**

இந்திய அரசு சுற்றுலா அமைச்சக உதவியுடன் நடத்தப்படும் "ஹுனார் சே ரோஜ்கார் யோஜனா" (விருந்தோம்பல் பயிற்சித் திட்டம்) என்ற திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி, துவாக்குடியிலுள்ள மாநில தங்கும் விடுதி மேலாண்மை மற்றும் உணவு தயாரிப்பு தொழில் நுட்ப நிறுவனம் மற்றும் சென்னை தரமணியிலுள்ள தங்கும் விடுதி மேலாண்மை, உணவு தயாரிப்பு தொழில்நுட்பம் மற்றும் ஊட்டச்சத்து உணவு நிறுவனம் ஆகியவற்றால் திறன் வளர்க்கும் விருந்தோம்பல் பயிற்சித் திட்டம் நடத்தப்படுகிறது.

**வழிகாட்டிப் பயிற்சித் திட்டம்**

சுற்றுலா மேம்பாட்டில் வழிகாட்டிகளின் பங்கு இன்றியமையாததாகும். வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு நம் நாடு குறித்த சரியான விபரத்தை எடுத்துரைத்தல், அவர்களுக்கு உண்மையான தகவல்களை

அளித்தல், அவர்களின் பாதுகாப்பு நலம் பேணுதல் மற்றும் அவர்கள் தங்குவதற்கு வசதியான இடத்தை அளித்து, மகிழ்ச்சியான தங்கும் சூழ்நிலையை உறுதி செய்தல் ஆகியன சுற்றுலா வழிகாட்டிகளின் பொறுப்பாகும்.

சென்னையிலுள்ள அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிறுவனத்தின் கூட்டு முயற்சியுடன் ஓய்வு பெற்ற அரசு அலுவலர்கள், வேலையில்லா இளைஞர்கள் ஆகியோருக்கு வழிகாட்டி பயிற்சித் திட்டத்தை தமிழ்நாடு சுற்றுலாத் துறை நடத்தி வருகிறது.

பயிற்சி பெற்றவர்களுக்கு சுற்றுலா வழிகாட்டிக்கான அடையாள அட்டையும் வழங்கப்படுகிறது.

**''விருந்தினர் போற்றுதும், விருந்தினர் போற்றுதும்'' (சுற்றுலா நட்புணர்வு நடவடிக்கைகள்)**

சுற்றுலாப் பயணியை தக்க வைக்கும் முக்கிய காரணியாக 'சுற்றுலா நட்புணர்வு' விளங்குகிறது. நமது மாநிலத்திலுள்ள முக்கியத்துவம் பெற்ற பல்வேறு சுற்றுலாத் தலங்களில் சரியான விதத்தில் விருந்தினர் நலம் பேணப்படுவதன் மூலம் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்திட இயலும்.

எனவே, வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த சேவைகள் அளித்தலை உறுதி செய்திட, சுற்றுலாப் பயணிகளுடன் நேரடித் தொடர்புடையவர்களுக்கு 'திறன்



வளர்ப்பு பயிற்சி' அளித்தல் இன்றியமையாததாகும். ஆகையால் வாடகை சீருந்து ஓட்டுநர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள், இரயில்வே பணியாளர்கள், விமான நிலைய பணியாளர்கள், விமான பணியாளர்கள், போக்குவரத்து காவலர்கள், வழிகாட்டிகள், பயண முகமைகளின் பணியாளர்கள் ஆகியோருக்காக 'விருந்தினர் போற்றுதும், விருந்தினர் போற்றுதும்' முகாம்கள் நடத்தப்படுகின்றன. இதன் பயனாக சுற்றுலாப் பயணிகள் சிறந்த சேவைகளைப் பெற்றிடவும், அவர்கள் திருப்தியுடன் திரும்பிச் செல்லவும் வழிவகுக்கிறது. வாய் வழி வார்த்தை விளம்பரம் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்த பயிற்சியானது சென்னையிலும், மற்ற மாவட்டங்களிலும் முக்கிய சுற்றுலாத் தலங்களிலும் அளிக்கப்பட்டு வருகிறது.

**திறன் வளர்ப்பு பயிற்சி**

ஊரக சுற்றுலாத் தலங்களில் உள்ள உள்ளூர் மக்கள், தங்கும் விடுதிகளிலுள்ள வரவேற்பு பணியாளர்கள், வாடகை சீருந்து மற்றும் ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் விமான நிலைய / இரயில் நிலையங்களில் பணியாற்றுபவர்கள் ஆகியோருக்கு திறன் வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**சுற்றுலா பாதுகாப்பு அமைப்பு**

சுற்றுலாத் துறையின் கீழ் ''சுற்றுலா பாதுகாப்பு அமைப்பு'' ஒன்று செயல்பட்டு

வருகிறது. இந்த அமைப்பில் சென்னையில் ஒரு முதன்மை சுற்றுலா பாதுகாவலரும், அவரின் கீழ் ஐந்து முக்கிய சுற்றுலாத் தலங்களான மாமல்லபுரம், இராமேசுவரம், கன்னியாகுமரி, கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் தலா ஐந்து 'நிலைய சுற்றுலா பாதுகாவலர்'களும் உள்ளனர். இந்த சுற்றுலா பாதுகாப்பு அமைப்பானது முதற் கட்டமாக ஐந்து மையங்களில் துவங்கப்பட்டு, அவற்றின் வெற்றிகரமான செயல்பாட்டின் அடிப்படையில் மற்ற முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கு விரிவுபடுத்துதல் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது இக்குழுவில் **30** பாதுகாவலர்கள் உள்ளனர்.

சுற்றுலாப் பயணிகள் வருகை வளர்ச்சியினை ஒப்பிடும்போது, சுற்றுலா பாதுகாப்பு அமைப்பின் அளவு சிறியதாகும். தமிழ்நாடு பாதுகாப்பான மாநிலமாக உள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடையே நம்பிக்கை உணர்வையும், பாதுகாப்பு உணர்வையும் ஏற்படுத்தும் ஓர் அமைப்பாக செயல்படுகிறது. கூட்ட நெரிசல் உள்ள ஒரு சுற்றுலாத் தலத்திற்கு புதிதாக வரும் சுற்றுலாப் பயணிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளான இடையூறு அற்ற பயணம், தொடர்பு கொள்ளுதல், இடைத்தரகர்களை தவிர்த்தல், ஏனைய எதிர்பாரா தேவைகளுக்கு உதவுதல் போன்றவை இதன் நோக்கமாகும். பல்வேறு பகுதிகள் மற்றும் பலமொழிகளை அறிந்துள்ள முன்னாள் இராணுவத்தினர் இப்பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.



இப்பாதுகாவலர்கள், சுற்றுலாப் பயணிகளின் பிரச்சனைகளை எளிதில் புரிந்து கொண்டு, அவரவர்களின் மொழியிலேயே அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதன் மூலம், வரும் சுற்றுலாப் பயணிகள் தங்களது சொந்த இல்லத்தில் இருப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது. சுற்றுலா பாதுகாப்பு அமைப்பினர்களுக்கு சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் காவல் துறை ஆகியோரிடையே இணக்கமான சூழலை உறுதி செய்திட, சென்னையிலுள்ள தமிழ்நாடு காவலர் பயிற்சி மையம் வாயிலாக பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த சுற்றுலாப் பாதுகாப்பு அமைப்பை ஊக்கப்படுத்தியும், அதில் தமிழ்நாடு சுற்றுலாவின் முன்னோடியான பங்கினையும் இந்திய அரசின் சுற்றுலா அமைச்சகம் பாராட்டியுள்ளது. சுற்றுலாக் காவலர் அமைப்பின் திறமையான செயல்பாடுகள் வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் மக்களின் நல்ல பாராட்டினைப் பெற்று, இது குறித்து பத்திரிக்கை ஊடகங்களிலும் செய்திகள் வெளிவந்துள்ளன.

**சுற்றுலா மேம்பாட்டு நடவடிக்கைகள்**

**அ) வெளியீடுகள் – விளம்பரம், பன்னாட்டு பயண சந்தைகள்:**

தமிழ்நாடு சுற்றுலா உள்நாட்டு மற்றும் பன்னாட்டு ஊடகம் சார்ந்த மேம்பாட்டு

நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இவை குறித்த விளம்பரங்கள் பல்வேறு உள்நாட்டு மற்றும் பன்னாட்டு விமானங்களில் வழங்கப்படும் சஞ்சிகைகள் மற்றும் ஏனைய பயணம் சார்ந்த பத்திரிக்கைகளில் வெளியிடப்பட்டு வருகின்றன.

இவற்றுடன் உள்நாட்டு விமான சஞ்சிகைகள் மற்றும் பயணம் சார்ந்த பத்திரிக்கைகளில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

மேலும், வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களில் சீரிய இடைவெளியில் சுற்றுலா விளம்பரங்கள் வெளியிடப்பட்டு வருவதுடன், முன்னோடி சுற்றுலா திட்டங்கள் குறித்த விளக்கங்களும் அளிக்கப்படுகின்றன. சுற்றுலா வளம் நிறைந்த நகரங்கள் மற்றும் பகுதிகளில் தமிழ்நாடு சுற்றுலாவின் விளம்பர முகாம்கள் மற்றும் சந்தைப்படுத்துதல் சந்திப்புகள் தொடர்ந்து நடத்தி, அப்பகுதிகளிலுள்ள சுற்றுலாப் பயணிகள் மற்றும் பயண முகவர்களை ஈர்த்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**பன்னாட்டு பயணச் சந்தைகள்**

தமிழ்நாடு சுற்றுலா, பன்னாட்டு சுற்றுலாச் சந்தைகள், பொருட்காட்சிகள் மற்றும் விழாக்களில் பங்குகொண்டு தமிழ்நாட்டின் சுற்றுலா வளத்தை விளம்பரப்படுத்துகிறது.



''பரவசமூட்டும் தமிழ்நாடு – நீங்களே அனுபவியுங்கள்'' என்ற தமிழ்நாடு சுற்றுலாவின் வாசகம் இந்திய மற்றும் வெளிநாட்டு சுற்றுலாத் தொழில் துறைகளில் ஆக்கபூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் 'பரவசமூட்டும் தமிழ்நாடு' என்ற சொற்றொடர் பரவலாக அறியப்பட்ட சுற்றுலா குறியீடாக உருவெடுத்துள்ளது. இதன் பிரதிபலிப்பாக சுற்றுலாப் பயணிகளின் வருகை குறிப்பிடும் வகையில் அதிகரித்துள்ளது.

**ஆ) கண்காட்சிகள், விழாக்கள் மற்றும் கருத்தரங்குகள்**

தமிழ்நாட்டில் ஆண்டு தோறும் நடைபெறும் விழாக்கள், உல்லாசம் மற்றும் மகிழ்ச்சி அலைகளை ஏற்படுத்தி, வருகை தரும் சுற்றுலாப் பயணிகளை உற்சாகப்படுத்துகிறது. ஒரு சுற்றுலாத் தலத்தில் நடத்தப்படும் விழாக்கள் அவ்விடத்தின் வாழ்க்கை முறை மற்றும் பண்பாட்டினை பிரதிபலிக்கின்றன. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளில் குறிப்பாக ஐரோப்பா, இங்கிலாந்து, அமெரிக்கா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் மொரிசியஸ் ஆகிய நாடுகளிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகள், தங்களது பயணத் திட்டத்தில் தமிழ்நாட்டின் முக்கிய விழாக்களை கண்டு களிப்பதையும் சேர்த்துக் கொள்கின்றனர். விழாக் காலங்களில் முக்கியமாக இசை விழா, நாட்டிய விழா மற்றும் சித்திரைப் பெருவிழா போன்றவற்றின் போது அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர்.

மாமல்லபுரத்தில் நடைபெறும் நாட்டிய விழாவிற்கு இந்தியாவிலும் வெளிநாட்டிலும் சிறந்த வரவேற்பு இருப்பதால், இந்திய நாட்டிய விழாவாக கருதப்படுகிறது.

தமிழ்நாடு சுற்றுலாத் துறை மூலம் மலைவாசஸ்தலங்களில் நடத்தப்படும் கோடை விழா, கன்னியாகுமரியில் நடத்தப்படும் தேசிய சுற்றுலா விழா மற்றும் இராமேசுவரத்தில் நடத்தப்படும் தேசிய புனிதப் பயணியர் விழா ஆகியன பெருமளவிலான சுற்றுலாப் பயணிகளை கவர்ந்துள்ளது. இத்தகைய விழாக்களை சுற்றுலாவிற்கான காரணிகளாக மேம்படுத்தியதன் பயனாக, பருவ காலத்தில் மட்டுமே சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு வருவர் என்ற எண்ணத்தை மாற்றிட இவ்விழாக்கள் உதவுகின்றன.

இவை தவிர, முக்கிய கண்காட்சிகள், வர்த்தக கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகளில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை பங்கேற்கிறது. பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும் சுற்றுலா குறித்த படிப்பினை முனைப்புடன் மேம்படுத்தும் வகையில் அவ்விடங்களில் சுற்றுலா குறித்த கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம், மாணவர்களிடையே சுற்றுலா விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்படுகிறது.



**இ) சுற்றுலா வெளியீடுகள்**

சுற்றுலாப் பயணிகளுக்கு முக்கியமான தகவல்கள் வழங்கிடும் வகையில், சுற்றுலாத் துறை மூலம் அச்சடிக்கப்பட்ட தகவல் செறிந்த மடிப்பேடுகள் மற்றும் புத்தகங்கள், அதி நவீன ஊடகப் பொருட்களான குறுந்தகடு (சி.டி.), 25 நிமிடங்கள் ஓடக்கூடிய மென்தகடு (டி.வி.டி) போன்றவை தயாரிக்கப்பட்டு வழங்கப் படுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் நமது மாநிலத்தின் சுற்றுலா சிறப்புகளை வெளிக்கொணரும் வகையில் பொதுவான கருப்பொருளுடன் வண்ணமிகு நாட்காட்டிகள் சுற்றுலாத் துறை மூலம் வெளியிடப்பட்டு வருகின்றன. நடைபெறும் 2011ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் ‘‘தமிழ்நாட்டின் இனிய கடற்கரைகள்’’ என்பதாகும்.

**சுற்றுலா செய்தி மடல்**

தமிழகத்தின் சுற்றுலா சார்ந்த முக்கிய நிகழ்வுகளை பல்வேறு பகுதிகளில் விளம்பரப்படுத்தவும், சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிக்கும் அனுகூலத்தை பெறவும், முக்கிய சுற்றுலா நிகழ்வுகளை பதிவு செய்தல் அவசியமாகும். அதற்காக சுற்றுலா செய்தி மடல் தமிழக சுற்றுலாத் துறையால் வெளியிடப்படுகிறது. இச் செய்தி மடல் அனைத்து மாநில அரசுகள் மற்றும் இந்திய அரசு சுற்றுலா அலுவலகங்கள், பயணம்

நடத்துபவர்கள், பயண முகவர்கள் மற்றும் விடுதி உரிமையாளர்கள் அனைவருக்கும் விநியோகிக்கப்படுகின்றன. சுற்றுலாத் துறையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் மற்றும் சுற்றுலாத் துறை சார்ந்த முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் இம்மடலில் முன்னுரிமைப் படுத்தப்படுகின்றன.

**தூய்மை பேணுதல்**

சுற்றுலாப் பயணிகளால், குறிப்பாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளால் முக்கியமாக எதிர்பார்க்கப்படுவது சுகாதாரம் மற்றும் தூய்மை ஆகியனவாகும். சுற்றுலாவின் வளர்ச்சிக்கு முக்கியத் தடையாக இருப்பது முறையற்ற கழிவு மேலாண்மையாகும். விழாக் காலங்களில் சுற்றுலாத் தலங்களுக்கு வருகை தரும் அதிக அளவிலான பார்வையாளர்கள் மற்றும் உள்ளூர் பொதுமக்கள் ஆகியோரால் வீசப்படும் கழிவுப் பொருட்கள், பிளாஸ்டிக் பைகள், உணவுப் பொருட்கள் ஆகியன இயற்கை மற்றும் கட்டிடக் கலையின் பெருமையையும், அழகினையும் மறைத்து விடுகின்றன.

எனவே, அனைத்து சுற்றுலாத் தலங்களையும் குப்பையில்லா பகுதி / பிளாஸ்டிக் இல்லா பகுதி / பசுமைப் பகுதி என அறிவித்திட திட்டமிடப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு சாரா அமைப்புகளின் கூட்டு முயற்சியுடன், குறிப்பிட்ட பகுதிகளில் 'தூய்மைப் பேரணி' நடத்தப்படும். சுற்றுலாப் பயணிகள் மற்றும் கடை வியாபாரிகள் / சிறு வியாபாரிகள்



ஆகியோருக்காக விழிப்புணர்வு முகாம்களும் நடத்தப்படும்.

**உள் கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு**

**மைய அரசு நிதி உதவித் திட்டங்கள்**

தமிழ்நாட்டில் சுற்றுலா மேம்பாட்டிற்காக பின்வரும் நான்கு சுற்றுலா பெருந்திட்டங்களை மைய அரசின் சுற்றுலா அமைச்சகம் ஒப்பளித்துள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மைய அரசு சுற்றுலாத் துறை அனுமதித்த தொகை (ரூ. லட்சத்தில்) | மைய அரசு சுற்றுலாத் துறை விடுவித்த தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | வழிபாட்டு சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துதல் சுற்றுலா சுற்று வட்டத்தின் கீழ் மதுரை மேம்பாடு சுற்றுலா பெருந்திட்டம் | 1255.45 | 607.99 |
| 2. | வழிபாட்டு சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துதல் சுற்றுலா சுற்று வட்டத்தின் கீழ் இராமேசுவரம் மேம்பாடு சுற்றுலா பெருந்திட்டம் | 1000.75 | 607.99 |
| 3. | வழிபாட்டு சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துதல் சுற்றுலா சுற்று வட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மேம்பாடு சுற்றுலா பெருந்திட்டம் | 1375.50 | 607.99 |
| 4. | பெருந்திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் அரண்மனையை மேம்படுத்துதல் | 1475.00 | 737.50 |
| | மொத்தம் | **5106.70** | **2561.47** |

இந்த சுற்றுலாப் பெருந்திட்டங்கள் நடப்பு ஆண்டிலேயே முடிக்கப்படும்.

## சுற்றுலா பெருந்திட்டம்

தொடர்ந்து அதிகரித்து வரும் சுற்றுலா பயணிகளின் வருகையால், சுற்றுலாத் தலங்களின் உள்கட்டமைப்பு வசதிகள், சுகாதாரமான கழிப்பிட வசதிகள், கழிவு மேலாண்மை மற்றும் திறன் வளர்ச்சி பயிற்சிகள் போன்றவற்றின் தேவை மீது ஏற்பட்டுள்ள நேரடி தாக்கத்தின் விளைவாக, சவாலான சூழ்நிலைகளை எதிர்கொள்ள வேண்டி உள்ளது.

சமயம் சார்ந்த நிகழ்வுகள், விழாக்கள், முக்கியமான பண்டிகைகள் போன்ற தருணங்களில் சுற்றுலா பயணிகளின் வருகை அப்பகுதியின் தாங்கும் திறனுக்கும் மேலாக அதிகரித்து வருகிறது. மேலும், சுற்றுச் சூழல் மிகுந்த மலை பகுதிகள், வனப் பகுதிகள், கடற்கரைகள், கழிமுகத்துவாரங்கள் ஆகிய இடங்களில் பயணிகள் நெரிசலை தாங்கும் வகையில் நிலைத்த பயனளிக்கும் திட்டங்கள் தேவை. பெருகி வரும் சுற்றுலாப் பயணிகளின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் தொலை நோக்குத் திட்டம் வகுத்து அதனை செயல்படுத்த வேண்டிய அவசியம் உருவாகியுள்ளது.

இந்த சுற்றுலா பெருந்திட்டம் தயாரிக்கும் பணியை ஹட்கோ, சென்னை என்ற அரசு நிறுவனத்திடம் வழங்கப்பட்டது. இதனை கருத்தில் கொண்டு, அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சுற்றுலா தொழில் முனைவோருடன் இணைந்து மாவட்ட



அளவிலான சுற்றுலா தேவைகளைக் கண்டறிந்து சுற்றுலா பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சுற்றுலா மேம்பாடு தோராயமாக ரூ.**1,611** கோடியில், வணிக கட்டமைப்புகளை அதிக அளவில் தனியார் பங்கேற்பு மூலம் செயல்படுத்தலாம் எனவும் கூறப்பட்டுள்ளது. அரசின் நிதி உதவியுடன் பல்வேறு சுற்றுலாத் தலங்களை தெரிவு செய்து, மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். சுற்றுலா பெருந்திட்டத்தின் வழிகாட்டுதலின்படி சுற்றுலா வளர்ச்சித் திட்டங்கள் மாநில அரசால் வகுக்கப்படும்.

## ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவித் திட்டம்

ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவித் திட்டத்தின் மூலம் நிதியினைப் பெற்று சுற்றுலாத் தலங்களில் கட்டமைப்பு வசதிகளை செய்வதற்கு தமிழ்நாடு சுற்றுலாத் துறை திட்டமிட்டுள்ளது.

இந்த அரசு ரூ.**450** கோடி மதிப்பீட்டில் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியுடன் சுற்றுலாத் தலங்களை அழகுபடுத்துதல் போன்ற சிறப்பு சுற்றுலா மேம்பாட்டு திட்டங்களையும், கிழக்கு கடற்கரைச் சாலையில் சுற்றுலா அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும் மற்றும் தென்னக சுற்றுலா சுற்றுச் சாலைகளை செயல்படுத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டமிடுதலில் பின்வரும் இரண்டு சுற்றுலாச் சுற்றுகளில் மேம்பாடு செய்திட தொழில் நுட்ப கூர்ந்தாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அ) கிழக்கு கடற்கரைச் சாலை சுற்றுலா சுற்று

ஆ) தென்னக சுற்றுலா சுற்று

| தெரிவு செய்யப்பட்டுள்ள சுற்றுலா பகுதிகள் / சுற்றுகள் | | |
|---|---|---|
| பொருள் | கிழக்கு கடற்கரைச் சாலை சுற்றுலா சுற்று | தென்னக சுற்றுலா சுற்று |
| சுற்றுலாப் பகுதிகள் | சென்னை முதல் தஞ்சாவூர் வரையில் நவக்கிரகக் கோயில்கள், தஞ்சாவூர் அரண்மனை மற்றும் அதைச் சார்ந்த பகுதிகள் | மதுரை– இராமேசுவரம் – திருநெல்வேலி – மதுரை நாற்கோண மாவட்டங்களில் உள்ள சுற்றுலாப் பகுதிகள் |
| சுற்றுச் சூழல் சுற்றுலா | • பிச்சாவரம் – மக்கள் சார் சுற்றுச் சூழல் சுற்றுலா | • மன்னார் வளைகுடா பகுதிகள் – இராமேசுவரம்<br>• களக்காடு முண்டந்துறை புலிகள் சரணாலயம் – இப்பகுதியில் மணிமுத்தார் மற்றும் முண்டந்துறை பகுதிகள்<br>• திருவில்லிப்புத்தூர் வனப் பகுதி<br>• ஒருங்கிணைந்த பறவைகள் சரணாலயங்கள் சுற்று |
| புராதன மற்றும் பண்பாட்டு பொக்கிஷங் கள் | • மாமல்லபுரம்<br>• தரங்கம்பாடி புனரமைப்பு<br>• பூம்புகார்<br>• நவக்கிரகக் கோயில்கள்<br>• தஞ்சாவூர் அரண்மனை | • நவதிருப்பதி – வைணவக் கோயில்கள்<br>• தூத்துக்குடி – பெருந்திட்டம் சார்ந்த மேம்பாடு |



சென்னைக்கு தெற்கில் உள்ள காஞ்சீபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் ஆகிய கடற்கரை மாவட்டங்கள் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் கிழக்குக் கடற்கரைச் சாலை சுற்றில் அடங்கும். தென்னக பாரம்பரிய மற்றும் சுற்றுச்சூழல் சுற்றுலா சுற்று என்பது தமிழ்நாட்டின் தெற்கு பகுதியில் அமைத்து, வடக்கு மற்றும் தெற்கு சுற்றுலா பிரிவுகளாக உருவாக்கப்பட்டுள்ளன. வடக்கு பிரிவில் புனிதத்தல மற்றும் புராதன மேன்மை வாய்ந்த மதுரை, தேனி, விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களும், தெற்கு பிரிவில் சுற்றுச்சூழல் மற்றும் புனிதத்தல சிறப்பு வாய்ந்த திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களும் அடங்கும்.

இத்திட்டம் திட்டமிடுதலில் ஆரம்பித்து, திட்டங்களை நிறைவேற்றி பின் பராமரிப்பு வரை நான்கு பகுதிகளாக ஐந்தாண்டுகளில் மேற்கொள்ளப்படும். தமிழ்நாட்டில் முன்னுரிமை பெற்ற இனங்களுக்கு, இத்திட்டத்தின்கீழ் ரூ.450 கோடி ($ 100 Million) செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொகையில் ஆசிய வளர்ச்சி வங்கி ரூ.315 கோடி ($ 70 Million) கடனாகவும், மாநில அரசு நிதி உதவி ரூ.135 கோடியாகவும் ($ 30 Million) இருக்கும்.

பணிகளை செயற்படுத்த, திட்ட செயலாக்கப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும். இந்த திட்ட செயலாக்கப் பிரிவும், திட்ட

அலுவலகங்களும் பணிகளை மேற்பார்வையிடுதல், திட்ட வரைபடம் தயாரித்தல், செயற்படுத்துதல் மற்றும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கு பொறுப்பாகும். ஆசிய வளர்ச்சி வங்கியின் வழிகாட்டுதலின்படி திட்ட செயலாக்கப் பிரிவும், திட்ட அலுவலகங்களும் தெரிவு செய்து அமைக்கப்பட்டு சிறந்த திட்டமிடல், வரைபடம் தயாரித்தல், செயல்படுத்துதல், பராமரிப்பு மற்றும் கட்டுப்பாடு ஆகியன மேற்கொள்ளப்படும்.



## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை

தமிழ்நாட்டில் சுற்றுலா தொடர்பான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு அரசு சார்ந்த நிறுவனம் ஒன்றினை அமைத்திட கருத்தில் கொண்டு, **30–06–1971** அன்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உருவாக்கப்பட்டது. ஐந்து அரசு தங்கும் விடுதிகள் மற்றும் இரண்டு பேருந்துகளுடன் துவக்கப்பட்ட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இன்று **55** தங்கும் விடுதிகளையும், **25** பேருந்துகளுடன் பெருமைப்படும் வகையில் வளர்ச்சி பெற்றுள்ளது.

அதிகம் பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தும் நோக்கத்தோடு, கோத்தகிரி, பிச்சாவரம் மற்றும் பைக்காரா ஆகிய இடங்களில் சுற்றுலா கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், முக்கிய சுற்றுலாத் தலங்களிலும், உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு உள்ளிட்ட மலைவாழிடங்களிலும் இளைஞர் விடுதிகளை நடத்தி வருகிறது. இளைஞர் விடுதியில் உள்ள பலர் தங்கும் அறையில் பருவ காலங்களிலும் நடுத்தர வர்க்க சுற்றுலாப் பயணிகள் மற்றும் கல்வி நிறுவனங்களின் மாணவர்கள் தங்கிச் செல்லும் வகையில் குறைந்த செலவில் பலர் ஒன்றாக தங்கிச் செல்லும் வசதி (Dormitory) உள்ளது .

**மின்னணு ஆளுமை முனைப்பு நடவடிக்கை**

மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகங்களில் முதன்முதலில் இணையதளம் மூலம் நேரடி முன்பதிவு செய்யும் முறை அறிமுகப்படுத்திய பெருமை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை சாரும். ஏராளமான சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக இணைய தளத்தினை பார்வையிட்டு வருகின்றனர்.

**நேர் நிகர் சுற்றுலா**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது இணையதளத்தில், தமிழகத்தில் உள்ள 46 முக்கிய சுற்றுலாத் தலங்களை உள்ளடக்கிய நேர் நிகர் சுற்றுலாவினை (Virtual Tour) துவக்கியுள்ளது.

இந்த நேர் நிகர் சுற்றுலா (Virtual Tour) இணைய தளத்தில், பல்வேறு சுற்றுலா மையங்களை 360 டிகிரி அளவில் முழுமையான காட்சியினை காண்பிக்கிறது. சுற்றுலாப் பயணிகள், அதிலுள்ள சுற்றுலாத் தலங்களுக்கு நேரில் சென்று பார்த்து வந்த அனுபவத்தினை பெறலாம். இவ்வசதி சிறப்பான முயற்சி என்று ஊடகங்களால் பாராட்டப்பட்டுள்ளது.

**மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான சலுகைகள்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சலுகைகளைப் பெறுவதில், மூத்த



குடிமக்களுக்கு 20 விழுக்காடு சலுகையினையும், மாற்றுத் திறனாளிகளுக்கு 25 விழுக்காடு சலுகையினையும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அளிக்கிறது.

| **படகு குழாம்கள்** | | **படகுகள் எண்ணிக்கை** |
|---|---|---|
| • முட்டுக்காடு | : | 5 8 |
| • முதலியார்குப்பம் | : | 5 5 |
| • பிச்சாவரம் | : | 4 2 |
| • ஏற்காடு | : | 7 5 |
| • கொடைக்கானல் – I<br>• கொடைக்கானல் – II | : | 8 4 |
| • குற்றாலம் | : | 3 3 |
| • உதகமண்டலம் | : | 1 3 9 |
| • பைக்காரா | : | 2 7 |
| மொத்த படகுகள் | : | 5 1 3 |

**போக்குவரத்துப் பிரிவு**

| **பேருந்து வகை** | **எண்ணிக்கை** |
|---|---|
| வோல்வோ பேருந்து | 2 |
| 35 இருக்கை குளிர்சாதன பேருந்து | 4 |
| 35 இருக்கை குளிர்சாதனமற்ற பேருந்து | 4 |
| 18 இருக்கை குளிர்சாதன பேருந்து | 9 |
| 18 இருக்கை குளிர்சாதனமற்ற பேருந்து | 4 |
| 10 இருக்கை குளிர்சாதன டெம்போ | 2 |
| **மொத்தம்** | **25** |

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தொகுப்பு சுற்றுலாக்கள்**

1) அரை நாள் சென்னை நகர சுற்றுலா
2) ஒரு நாள் காஞ்சிபுரம், மாமல்லபுரம் சுற்றுலா
3) விரும்பும் இடத்தில் ஏறி, இறங்கும் சுற்றுலா
4) ஒரு நாள் திருப்பதி சுற்றுலா
5) ஒரு நாள் திருவண்ணாமலை கிரிவலச் சுற்றுலா
6) ஒரு நாள் ஸ்ரீபுரம் தங்க கோவில் சுற்றுலா
7) ஒரு நாள் பாண்டிச்சேரி சுற்றுலா
8) மூன்று நாட்கள் நவக்கிரக சுற்றுலா
9) நான்கு நாட்கள் அறுபடை வீடுகள் சுற்றுலா
10) ஆறு நாட்கள் தென்னிந்திய சுற்றுலா
11) ஏழு நாட்கள் மூகாம்பிகை சுற்றுலா
12) எட்டு நாட்கள் கிழக்கு மேற்கு கடற்கரையோரச் சுற்றுலா
13) எட்டு நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா
14) எட்டு நாட்கள் கோவா, மந்த்ராலயம் சுற்றுலா
15) பதினான்கு நாட்கள் தென்னிந்தியச் சுற்றுலா
16) ஒரு நாள் சக்தி சுற்றுலா
17) ஒரு நாள் திருமால் தரிசன சுற்றுலா
18) ஒரு நாள் நவக்கிரக சுற்றுலா
19) ஒரு நாள் சுருட்டப்பள்ளி சுற்றுலா
20) மூன்று நாள் திருமணத் திருத்தல சுற்றுலா
21) மூன்று நாள் பஞ்ச பூத ஸ்தலங்கள் சுற்றுலா
22) நான்கு நாள் சோழ நாட்டுத் திருப்பதிகள் சுற்றுலா
23) நான்கு நாள் அருவிகள் சுற்றுலா
24) ஐந்து நாள் 108 அம்மன் கோவில் சுற்றுலா
25) ஐந்து நாள் பாண்டிய நாட்டு திருப்பதிகள் சுற்றுலா
26) **பருவ கால சிறப்பு சுற்றுலாக்கள் / குழுச் சுற்றுலாக்கள்**
    அ) உதகமண்டலம் சுற்றுலா
    ஆ) கொடைக்கானல் சுற்றுலா
    இ) ஏற்காடு–ஒகேனக்கல் சுற்றுலா
    ஈ) மைசூரு–பெங்களூரு சுற்றுலா
    உ) மூணாறு சுற்றுலா
    ஊ) குற்றாலம் சுற்றுலா



**இரயில் மற்றும் சாலை சுற்றுலா**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், புதுதில்லி, மும்பை, கொல்கத்தா, அகமதாபாத் மற்றும் ஜெய்ப்பூரிலிருந்து இரயில் மற்றும் சாலை சுற்றுலாவினை நடத்தி வருகிறது. இச்சுற்றுலாவில் வரும் சுற்றுலாப் பயணிகளை சென்னை இரயில் நிலையங்களிலிருந்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பேருந்திற்கு அழைத்து வரப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணங்களை முடித்து திரும்பியதும் மீண்டும் சென்னை இரயில் நிலையங்களுக்கு செல்வதற்கு பேருந்தில் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

**தேவைக்கேற்ப ஏற்பாடு செய்யப்படும் சுற்றுலாக்கள்**

குழுவாக வரும் சுற்றுலாப் பயணிகளின் பயணநிரல்படி, அவர்களின் தேவைக்கேற்ப சிறப்பான பயண நிரல் தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் சுற்றுலா ஏற்பாடு செய்து தரப்படுகிறது.

**முடிவுரை**

பல்வேறு சுற்றுலா கட்டமைப்பு திட்டங்களை செயல்படுத்தியும், சுற்றுலா நட்புணர்வு சேவைகளை செம்மைப் படுத்தியும், தமிழ்நாட்டை பன்னாட்டு சுற்றுலாத் தலமாக்கும் அரசின் நோக்கத்தை செயலாக்க, மாநில சுற்றுலாத்துறை முனைப்புடன் செயல்படும்.

சுற்றுச் சூழல் மற்றும் பாரம்பரியத்தினைப் பேணும் மற்றும் சமூகம் சார்ந்த சுற்றுலா வளர்ச்சியை ஏற்படுத்த, சுற்றுலாத் துறை, தனியார் அமைப்புகளையும் மற்றும் உள்ளூர் மக்களையும் ஈடுபடுத்தும். மேற்கூறிய கருத்துகளுக்கு செயல் வடிவம் கொடுத்து, அனைத்து திட்டங்களையும் இத்துறை முனைப்புடன் செயல்படுத்தும்.

**எஸ். கோகுல இந்திரா**
சுற்றுலாத் துறை அமைச்சர்



## இணைப்பு – 1

### தமிழ்நாடு சுற்றுலா ஓர் கண்ணோட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1. | சுற்றுலா அலுவலகங்கள் (தமிழ்நாட்டில்–18, வெளி மாநிலங்களில்–6) | : | 24 |
| 2. | சுற்றுலா தகவல் மையங்கள் (தமிழ்நாட்டில்–17, வெளி மாநிலங்களில்–6) | : | 23 |
| 3. | உலக பாரம்பரிய சின்னங்கள் | : | 5 |
| 4. | மாநில தொல்பொருள் துறையினரால் பராமரிக்கப்படும் சின்னங்கள் | : | 85 |
| 5. | மைய அரசு தொல்பொருள் துறையால் பராமரிக்கப்படும் சின்னங்கள் | : | 247 |
| 6. | கோட்டைகள் | : | 11 |
| 7. | அருங்காட்சியகங்கள் | : | 21 |
| 8. | இந்துசமய அறநிலையத் துறையினரால் பராமரிக்கப்படும் கோவில்கள் | : | 38436 |
| 9. | பெரிய துறைமுகங்கள் | : | 3 |
| 10. | பெரிய மலைவாசஸ்தலங்கள் | : | 12 |
| 11. | இரண்டாவது நீளமான கடற்கரை | : | மெரினா (சென்னை) 13 கி.மீ. |
| 12. | தமிழ்நாட்டின் உயரமான மலைச் சிகரம் | : | தொட்டபெட்டா (2636 மீட்டர்) |
| 13. | பன்னாட்டு விமான நிலையங்கள் | : | 1 |

14. உள்நாட்டு விமான நிலையங்கள் : 6

15. தமிழ்நாட்டில் உள்ள மொத்த ரயில் பாதை : 3941 கி.மீ.

16. மொத்த இளைஞர் விடுதிகள் : 7

17. தமிழ்நாட்டில் உள்ள மொத்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்கள் : 55

18. மொத்த படகு இல்லங்கள் : 9

19. மொத்த பேருந்துகள் : 25

20. மொத்த தொலைநோக்கு இல்லங்கள் : 3

21. பொழுதுபோக்கு பூங்காக்கள் : 23

### சுற்றுலாவின் வகைகள்

1) பொழுதுபோக்குச் சுற்றுலா
2) ஆன்மீகச் சுற்றுலா
3) பாரம்பரியச் சுற்றுலா
4) சாகசச் சுற்றுலா
5) சொகுசுக் கப்பல் சுற்றுலா
6) ஊரகச் சுற்றுலா
7) பொறுப்புணர்வு சுற்றுலா
8) வியாபாரச் சுற்றுலா
9) மருத்துவச் சுற்றுலா
10) சுற்றுச்சூழல் சுற்றுலா
11) பண்பாட்டுச் சுற்றுலா
12) கல்விச் சுற்றுலா



## இணைப்பு – 2

### சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா தகவல் மையங்கள்

### தமிழ்நாட்டில் செயல்படும் சுற்றுலா அலுவலகங்கள்

1) சென்னை
2) கன்னியாகுமரி
3) உதகமண்டலம்
4) கொடைக்கானல்
5) மாமல்லபுரம்
6) மதுரை
7) இராமேசுவரம்
8) தஞ்சாவூர்
9) திருச்சிராப்பள்ளி
10) திருநெல்வேலி
11) சேலம்
12) தருமபுரி
13) சிதம்பரம்
14) பூம்புகார்
15) வேலூர்
16) கோயம்புத்தூர்
17) காரைக்குடி
18) திருவண்ணாமலை

### பிற மாநிலங்களில் செயல்படும் சுற்றுலா அலுவலகங்கள்

1) புதுதில்லி
2) மும்பை
3) கொல்கத்தா
4) கோவா (பனாஜி)
5) ஜெய்ப்பூர்
6) ஆக்ரா

**தமிழ்நாட்டில் செயல்படும்**
**சுற்றுலாத் தகவல் மையங்கள்**

**அ) விமான நிலையங்கள்**

1) சென்னை (பன்னாட்டு விமான நிலையம்)
2) சென்னை (உள்நாட்டு விமான நிலையம்)
3) மதுரை
4) கோயம்புத்தூர்
5) திருச்சிராப்பள்ளி

**ஆ) இரயில் நிலையங்கள்**

1) சென்னை (சென்ட்ரல்)
2) சென்னை (எழும்பூர்)
3) மதுரை
4) கோயம்புத்தூர்
5) இராமேசுவரம்
6) திருச்சிராப்பள்ளி
7) திருநெல்வேலி

**இ) பேருந்து நிலையம்**

1) சென்னை மாநகர பேருந்து நிலையம், கோயம்பேடு

**ஈ) பிற இடங்கள்**

1) கூடலூர் (நீலகிரி மாவட்டம்)
2) ஓட்டல் தமிழ்நாடு வளாகம், தஞ்சாவூர்
3) பாஞ்சாலங்குறிச்சி (தூத்துக்குடி மாவட்டம்)
4) இராமநாதசுவாமி திருக்கோவில் வளாகம், இராமேசுவரம்.



**பிற மாநிலங்களில் செயல்படும் சுற்றுலாத் தகவல் மையங்கள்**

| | இடம் | மாநிலம் |
|---|---|---|
| 1) | இரயில் நிலையம், பெங்களூரு | கர்நாடகம் |
| 2) | ஐதராபாத் | ஆந்திரப்பிரதேசம் |
| 3) | திருவனந்தபுரம் | கேரளா |
| 4) | அகமதாபாத் | குஜராத் |
| 5) | புவனேஷ்வர் | ஒரிசா |
| 6) | லக்னோ | உத்தரப்பிரதேசம் |

## இணைப்பு – 3

### தமிழ்நாட்டில் உள்ள பாரம்பரிய நகரங்கள்

| வ. எண். | பாரம்பரிய நகரம் | மாவட்டம் |
|---|---|---|
| 1.<br>2.<br>3. | காஞ்சிபுரம்<br>மாமல்லபுரம்<br>ஸ்ரீபெரும்புதூர் | காஞ்சிபுரம் |
| 4.<br>5.<br>6.<br>7.<br>8.<br>9. | சிதம்பரம்<br>பிச்சாவரம்<br>மருதூர்<br>குறிஞ்சிபாடி<br>மரக்காணம்<br>திருவந்திபுரம் | கடலூர் |
| 10.<br>11.<br>12. | இராமேசுவரம்<br>வாலிநோக்கம்<br>சேதுக்கரை | இராமநாதபுரம் |
| 13. | ஸ்ரீரங்கம் | திருச்சிராப்பள்ளி |
| 14. | ஸ்ரீவில்லிபுத்தூர் | விருதுநகர் |
| 15.<br>16. | தஞ்சாவூர்<br>கும்பகோணம் | தஞ்சாவூர் |
| 17. | கங்கைகொண்ட சோழபுரம் | அரியலூர் |
| 18. | மதுரை | மதுரை |
| 19. | பழனி | திண்டுக்கல் |
| 20. | திருச்செந்தூர் | தூத்துக்குடி |
| 21.<br>22. | திருத்தணி<br>திருவள்ளூர் நகரம் | திருவள்ளூர் |
| 23.<br>24.<br>25. | கன்னியாகுமரி<br>பத்மநாபபுரம்<br>குளச்சல் | கன்னியாகுமரி |
| 26. | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 27.<br>28.<br>29. | செஞ்சி<br>பரிக்கல்<br>திருவக்கரை | விழுப்புரம் |
| 30.<br>31.<br>32.<br>33.<br>34. | செட்டிநாடு<br>காரைக்குடி<br>இடைக்காட்டூர்<br>பிள்ளையார்பட்டி<br>காளையார்கோயில் | சிவகங்கை |
| 35.<br><br><br>36. | நவதிருப்பதிகள்<br>அ) திருக்காலூர்<br>ஆ) குரும்பூர்<br>மணப்பாடு | தூத்துக்குடி |
| 37.<br>38.<br>39.<br>40. | தரங்கம்பாடி<br>பூம்புகார்<br>நாகூர்<br>வேளாங்கன்னி | நாகப்பட்டினம் |
| 41.<br>42. | குற்றாலம்<br>திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 43. | திருச்செங்கோடு | நாமக்கல் |
| 44. | பேரூர் | கோயம்புத்தூர் |
| 45. | பவானி | ஈரோடு |
| 46.<br>47.<br>48. | சித்தன்னவாசல்<br>ஆவுடையார்கோயில்<br>திருமயம் | புதுக்கோட்டை |

## இணைப்பு – 4

## விழாக்கள்

### மத்திய அரசு நிதி உதவியுடன் நடத்தப்படும் விழாக்கள்

இந்திய நாட்டிய விழா, மாமல்லபுரம் – டிசம்பர் 25 முதல் சனவரி 25 முடிய

தேசிய சுற்றுலா (ம) பண்பாட்டு விழா, கன்னியாகுமரி – சனவரி

தேசிய புனித பயணியர் திருவிழா, இராமேசுவரம் – சனவரி

### மாநில அரசு நிதி உதவியுடன் நடத்தப்படும் விழாக்கள்

தமிழகத்தின் பாரம்பரியமிக்க பண்பாட்டை எடுத்தியம்பும் வகையில் பின்வரும் விழாக்கள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன.

| | |
|---|---|
| இந்தியா முழுவதும் பொங்கல் சுற்றுலா விழா | – சனவரி |
| செட்டிநாடு விழா, காரைக்குடி | – சனவரி |
| இலக்கிய சுற்றுலா விழா, எட்டயபுரம், தூத்துக்குடி | – பிப்ரவரி |
| பழங்குடியினர் திருவிழா, கன்னியாகுமரி | – பிப்ரவரி |
| சித்திரை விசு விழா, பாபநாசம் | – ஏப்ரல் |
| சித்திரை நாட்டிய விழா, மதுரை | – மே |
| சித்திரை முழு நிலவு விழா, பூம்புகார் | – மே |
| கட்டபொம்மன் விழா, பாஞ்சாலங்குறிச்சி | – மே |
| சலங்கை நாதம் மற்றும் பாகவத மேளா, தஞ்சாவூர் | – மே |



| | |
|---|---|
| மாங்கனி விழா, கிருஷ்ணகிரி | – மே |
| மலை வாழிடங்களில் கோடை விழா | – மே |
| கந்தூரி விழா, நாகூர் | – மே |
| சாரல் திருவிழா, குற்றாலம் | – ஜுலை |
| திற்பரப்பு விழா, கன்னியாகுமரி | – ஜுலை |
| ஆடிப்பெருக்கு விழா, ஒகேனக்கல் | – ஜுலை |
| வேளாங்கன்னி மாதா திருவிழா, வேளாங்கன்னி | – ஆகஸ்ட் |
| அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் உலக சுற்றுலா தினம் | – செப்டம்பர் |
| தசரா பண்டிகை, குலசேகரபட்டினம் தூத்துக்குடி | – அக்டோபர் / நவம்பர் |
| மாமன்னன் இராசராசன் சதய விழா, தஞ்சாவூர் | – அக்டோபர் |
| திருவண்ணாமலை தீபத் திருவிழா | – நவம்பர் |
| தேயிலை மற்றும் சுற்றுலா விழா, உதகமண்டலம் | – டிசம்பர் |
| இந்திய நாட்டிய விழா, தஞ்சாவூர் | – டிசம்பர் / சனவரி |
| கிராமிய நாட்டியக்கலை விழா, கங்கைகொண்டசோழபுரம் | – டிசம்பர் / சனவரி |

-o))))((((o-

# சுற்றுலா

## மானியக் கோரிக்கை எண்.29

### 2011–2012ஆம் ஆண்டுக்கான

### கொள்கை விளக்கக் குறிப்பு

**பொருளடக்கம்**


| வ.எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | இந்திய சுற்றுலா | 3 |
| 3. | தமிழ்நாடு சுற்றுலா – வளங்களும், வாய்ப்புகளும் | 4 |
| 4. | சுற்றுலாவின் முக்கியத்துவம் | 5 |
| 5. | சுற்றுலா மேம்பாட்டில் தமிழ்நாட்டின் சிறப்பு அம்சங்கள் | 7 |
| 6. | புதிய சுற்றுலா வாய்ப்புகள் | 13 |
| 7. | பாரம்பரியச் சுற்றுலா | 17 |
| 8. | அதிகப் பிரபலமாகாத சுற்றுலா மையங்களை மேம்படுத்துதல் | 19 |
| 9. | தனியார் முதலீட்டிற்கான ஊக்கத் தொகை | 21 |
| 10. | மனிதவள மேம்பாடு | 23 |
| 11. | விருந்தோம்பல் பயிற்சித் திட்டம் (ஹுனார் சே ரோஜ்கார் யோஜனா) | 24 |
| 12. | வழிகாட்டிப் பயிற்சித் திட்டம் | 24 |
| 13. | "விருந்தினர் போற்றுதும், விருந்தினர் போற்றுதும்" (சுற்றுலா நட்புணர்வு நடவடிக்கைகள்) | 25 |
| 14. | திறன் வளர்ப்பு பயிற்சி | 26 |
| 15. | சுற்றுலா பாதுகாப்பு அமைப்பு | 26 |
| 16. | சுற்றுலா மேம்பாட்டு நடவடிக்கைகள் | 28 |
| 17. | சுற்றுலா செய்தி மடல் | 32 |
| 18. | தூய்மை பேணுதல் | 33 |
| 19. | உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு – மைய அரசு நிதி உதவித் திட்டங்கள் | 34 |
| 20. | சுற்றுலா பெருந்திட்டம் | 35 |
| 21. | ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவித் திட்டம் | 36 |
| 22. | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை | 40 |
| 23. | முடிவுரை | 44 |
| 24. | இணைப்பு | |
| | 1) தமிழ்நாடு சுற்றுலா ஓர் கண்ணோட்டம் | 46 |
| | 2) சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா தகவல் மையங்கள் | 48 |
| | 3) தமிழ்நாட்டில் உள்ள பாராம்பரிய நகரங்கள் | 51 |
| | 4) விழாக்கள் | 53 |